## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண். 150/2014

2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள், புதன்கிழமை 15-ம் நாள் உமா சங்கரி என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) செல்வி.எம்.சன்மதி பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமா சங்கரி | வயது | 52 |
| பதவி | வட்டார வளர்ச்சி அலுவலர் | தாலூக்கா | மேட்டுப்பாளையம் |
| கிராமம் | காரமடை | மாவட்டம் | கோயமுத்தூர் |
| தேதி | 15.07.2026 | PW9 | |

**முதல் விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிந்து வழக்கு தொடர்பான ஆவணங்கள் சமர்பிக்குமாறு அழைப்பாணை வந்ததன் பெயரில் இன்று நான் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு தொடர்பான ஆவணங்களை பின்வருமாறு குறியீடு செய்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வ.சா.ஆ-26 | 10.07.2026 | கடிதம் | சான்றிட்ட நகல் |
| வ.சா.ஆ 27 | | Administrative and Technical Sanction orders | உண்மை நகல் |
| வ.சா.ஆ 28 | | Road Register Records(Asset registers) | உண்மை நகல் |
| வ.சா.ஆ 29 | | Estimates and Drawings | உண்மை நகல் |
| வ.சா.ஆ 30 | | Measurement report including quality and inspection reports | உண்மை நகல் |
| வ.சா.ஆ.31 | | Tender and contractors details | உண்மை நகல் |
| வ.சா.ஆ 32 | | Financial and expenditure records | உண்மை நகல் |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அட்டஸ்ட் செய்து கொடுத்துள்ளேன் அதன் அசல் ஆவணங்களை நான் தற்போது வைத்துள்ளேன். மேற்படி ஆவணங்களில் எந்த க.ச.எண்ணில் சாலை உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு

தொடர்பான தென்வடல் ரோட்டிற்கும் நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. கோவிலுக்கு வடபுறத்தில் இடுகம்பாளையம் செல்லும் ரோடுள்ளது. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் எஸ்.புங்கம்பாளையம் என்ற ஊரிலிருந்து இடுகம்பாளையம் என்ற ஊர் வரை அமைத்துள்ள சாலையை தான் குறிக்கும் என்றால் சரிதான். நான் தாவா தென்வடல்சாலையை நேரில் சென்று ஆய்வு செய்யவில்லை.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

கோவிலுக்கு எதிரே உள்ள தென்வடல் ரோடு தொடர்பான ஆவணங்களை தான் நான் தாக்கல்செய்துள்ளேன் என்றால் இல்லை.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கைரேகை/ கையொப்பம் பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுப்பாளையம்.